## சுருக்கம்

பள்ளிக் கல்வி - தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வி ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 4989 இடைநிலை ஆசிரியர், 5154 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3876 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 14,019 காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் / பதவி உயர்வு மூலம் நிரப்பும் வரை பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு தொகுப்பு ஊதியத்தில் தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டதற்கு அனுமதி மற்றும் அப்பணியிடங்களில் பணிபுரியும் தற்காலிக அசிரியர்களுக்கு மதிப்பூதியம் (Honorarium) வழங்குவதற்கு ரூ.109,91,52,000/- நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை**

அரசாணை (நிலை) எண். 07

நாள்:07.01.2023
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம், மார்கழி-23

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (1டி) எண்.619, பள்ளிக் கல்வி [பக5(2)]த் துறை, நாள் 19.09.2018
2. அரசாணை (1டி) எண்.334, பள்ளிக் கல்வி [பக5(2)]த் துறை, நாள் 26.08.2019
3. அரசாணை (1டி) எண்.226, பள்ளிக் கல்வி [பக5(2)]த் துறை, நாள் 24.11.2021
4. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித எண்.34087/சி2/இ2/ 2022, நாள் 17.06.2022 மற்றும் 16.11.2022

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2018-19- ஆம் கல்வியாண்டில் 1474 முதுகலை ஆசிரியர்களை தொகுப்பூதிய அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமித்துக் கொள்ள தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கியும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2019 - 2020 ஆம் கல்வியாண்டில் 2449 முதுகலை ஆசிரியர் பணியிடமும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2021 - 2022 ஆம் கல்வியாண்டில் 2774 முதுகலை ஆசிரியர்

Scanned with Oken Scanner

முதுகலை ஆசிரியர் பணியிடமும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2021 - 2022 ஆம் கல்வியாண்டில் 2774 முதுகலை ஆசிரியர் பணியிடமும் முதுகலை ஆசிரியர் தகுதி பெற்ற நபர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாகத் தொகுப்பூதியத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமித்துக் கொள்ள அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதங்களில், தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் செயல்படும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2021 - 2022 ஆம் கல்வியாண்டில் 4863 இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடங்கள் உள்ளதாகவும், 31.05.2022 தேதியில் ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை 126 எனவும், இக்காலிப் பணியிடங்களையும் சேர்த்து நிரப்பத் தகுந்த காலிப் பணியிடங்கள் 4989 எனவும், இக்காலிப் பணியிடங்களில் பெரும்பாலானவை கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் ஏற்பட்டவை எனவும், 2013 - 2014 ஆம் கல்வியாண்டிற்கு பிறகு நேரடி நியமனத்தின் வாயிலாக புதிதாக ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படாததால், காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளதாகவும், இதனால் மாணவர்களின் கல்வி நலன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இல்லாததால் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு பாடத்திலும், மாணவர்கள் பெற வேண்டிய கற்றல் அடைவுகள் மற்றும் கற்றல் விளைவுகளில மிகவும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும், பெருந்தொற்று காலத்திற்கு பின்னர், அரசு பள்ளிகளில் புதிய மாணவர் சேர்க்கை கணிசமான எண்ணிக்கையில் உயர்ந்துள்ளதாகவும், அதற்கேற்ப சுமார் 5000 இடைநிலை ஆசிரியர்கள் கூடுதலாக அரசு பள்ளிகளுக்கு தேவைப்படுகின்றனர். எனவே, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆசிரியர்களை தெரிவு செய்யும் நடைமுறைகளை பின்பற்றி நேரடி நியமனம் மூலம் புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு கால அவகாசம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால், புதிய ஆசிரியர்களை நியமிக்கும் வரை மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படாமல் தற்காலிக ஆசிரியர்களை பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமித்திடலாம் எனவும், இவ்வகையில் நாளது தேதி வரை காலியாகவுள்ள 4989 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நியமனம் செய்ய அனுமதி வேண்டி தொடக்கக் கல்வி

Scanned with Oken Scanner

இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளதாக பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலே ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் 2018 - 2022 ஆம் கல்வியாண்டுகளில் மொத்தம் 6697 முதுகலை ஆசிரியர்களை தொகுப்பூதிய அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமித்துக் கொள்ள சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கி ஆணைகள் வெள்யிடப்பட்டுள்ளது என்றும், பள்ளிக் கல்வித் துறையில் அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.06.2022 தேதியில் 5154 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 3188 முதுகலை ஆசிரியர் காலிப்பணியிடங்கள் என மொத்தம் 8342 ஆசிரியர் காலிப்பணியிடங்கள் இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

4. தொடக்கக் கல்வித் துறையில் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-23 ஆம் கல்வியாண்டில் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வின் மூலம் நிரப்பிட பின்பற்ற வேண்டிய வழக்கமான நடைமுறைகளில் ஏற்படும் கால தாமதத்தினை கருதி, 2022-23 ஆம் கல்வியாண்டில் மாணவர்களின் கற்றல் அடைவுகள் மற்றும் விளைவுகளில் மிகவும் பின்னடைவு நிலையினை தவிர்க்கும்பொருட்டு, 14,019 காலிப் பணியிடங்களை வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதியை பெற்றுள்ள தகுதியான நபர்களைக் கொண்டு பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக மதிப்பூதிய அடிப்படையில் அரசின் அனுமதியினை எதிர்நோக்கி தற்காலிக நியமனம் செய்யப்பட்டு வந்த நிலையில், அவ்வாறு செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்குகள் தொடரப்பட்டது. அவ்வழக்குகளின் மீதான இடைக்கால தடையாணை காரணமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ஆளுகைக்குட்பட்ட 24 மாவட்டங்களில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 01.07.2022 நாளிட்ட இடைக்கால ஆணையின் அடிப்படையில் ஆகஸ்ட் 2022 ஆம் மாதம் முதல் தற்காலிக ஆசிரியர் நியமனங்கள் செய்யப்பட்ட நிலையில் 18.10.2022 இல் நீதிமன்ற வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் ஆளுகைக்குட்பட்ட 14 மாவட்டங்களில் அக்டோபர் 2022 ஆம் மாதம் முதல் தற்காலிக ஆசிரியர் நியமனங்கள் செய்யப்பட்டது என்றும் முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2729 ஆசிரியர்கள்

Scanned with Oken Scanner

13.10.2022 முதல் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும். தற்போது 688 தற்காலிக முதுகலை ஆசிரியர்கள் பணியில் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-23-ஆம் கல்வியாண்டில் உள்ள காலிப்பணியிடங்கள், பணியில் உள்ள ஆசிரியைகள் மகப்பேறு விடுப்பில் சென்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடங்கள் மற்றும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்து அவற்றுள் மூத்த பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பொறுப்பு தலைமை ஆசிரியராக பணிபுரிவதால் பதிலியாக பள்ளி மேலாண்மைக் குழு மூலம் நியமனம் செய்யப்பட்ட மொத்தம் 14019 இடைநிலை / பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கான மதிப்பூதியம் (Honorarium) வழங்க உத்தேச செலவின விவரம் பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

I.தொடக்கக் கல்வித் துறை

| வ. எண் | பதவி | தற்காலிக ஆசிரியர்கள் எண்ணிக்கை | மதிப்பூதியம் | பணிக் காலம் Duty Period | மொத்த செலவினம் (in Rupees) |
|---|---|---|---|---|---|
| 1. | இ.நி.ஆ (24 மாவட்டங்கள்) | 4775 | 12,000 | 7 Months | 40,11,00,000 |
| 2. | இ.நி.ஆ (14 மாவட்டங்கள்) | 214 | 12,000 | 5 Months | 1,28,40,000 |
| | மொத்தம் | 4989 | | | 41,39,40,000 |

II) பள்ளிக் கல்வித் துறை.

| வ. எண் | பதவி | தற்காலிக ஆசிரியர்கள் எண்ணிக்கை | மதிப்பூதியம் | Duty Period | மொத்த செலவினம் (In Rupees) |
|---|---|---|---|---|---|
| 1. | ப.ஆ. (24 மாவட்டங்கள்) | 2153 | 15,000 | 07 Months | 22,60,65,000 |
| 2. | ப.ஆ. (14 மாவட்டங்கள்) | 3001 | 15,000 | 05 Months | 22,50,75,000 |
| 3. | மு.க.ஆ. (நேரடி நியமனத்திற்கு முன்) | 3188 | 18,000 | 03 Months | 17,21,52,000 |
| 4. | மு.க.ஆ. (நேரடி நியமனத்திற்கு பின்) | 688 | 18,000 | 05 Months | 6,19,20,000 |
| | மொத்தம் | 9030 | | | |
| | | | | மொத்தம் | 23,40,72,000 |
| | | | | மொத்தம் (பள்ளிக் கல்வி) | 68,52,12,000 |
| மொத்தம் | | | | | 109,91,52,000 |
| (ரூபாய் நூற்று ஒன்பது கோடியே தொண்ணூற்று ஒன்று இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும் | | | | | |

Scanned with Oken Scanner

6. மேலும் மேற்கண்டவாறு, தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் காலியாகவுள்ள 14019 இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பணியிடங்களை நேரடி நியமனம் / பதவி உயர்வு மூலம் நிரப்பும் வரை பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டதற்கு அனுமதி வழங்குமாறும், அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் (Honorarium) வழங்குவதற்கு ரூ.109.92 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேற்காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) 2022-23 ஆம் கல்வி ஆண்டில் தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள 4989 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், 5154 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3876 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 14,019 பணியிடங்களை நேரடி நியமனம் / பதவி உயர்வு மூலம் நிரப்பும் வரை பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக தற்காலிக ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டதற்கு அனுமதியும், அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட ஒரு இடைநிலை ஆசிரியருக்கு மதிப்பூதியம் (Honorarium) ரூ. 12,000/- மற்றும் ஒரு பட்டதாரி ஆசிரியர் ஆசிரியருக்கு மதிப்பூதியம் (Honorarium) ரூ.15,000/- மற்றும் ஒரு முதுகலை ஆசிரியருக்கு மதிப்பூதியம் (Honorarium) ரூ.18,000/- என மொத்தம் 14,019 இடைநிலை/ பட்டதாரி/ முதுகலை ஆசிரியகளுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.109,91,52,000/- (ரூபாய் நூற்று ஒன்பது கோடியே தொண்ணூற்றொன்று இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் இரண்டு இலட்சம் மட்டும்)நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ii. வரும் ஆண்டுகளில் தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் ஏற்படும் ஆசிரியர் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் / பதவி உயர்வு மூலம் நிரப்பும் வரை, மாணவ- மாணவிகளின் கல்வி நலன் கருதி, ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக ஆசிரியர் நியமனம் செய்ய பள்ளிக் கல்வி ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணை வழங்கப்படுகிறது. அவ்வாறு நியமனம் செய்யும்போது ஒருகிங்ணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பின்படி (IFHRMS) அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில், IFHRMS-ன்படி நிரப்பப்பட்ட பணியிடங்களை தவிர்த்து மீதமுள்ள பணியிடங்களுக்கு மட்டுமே தற்காலிக

Scanned with Oken Scanner

ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும் என பள்ளிக் கல்வி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி 8(i) ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>தொடக்கக் கல்வி – ரூ.41,39,40,000/-</u>

2202 – பொதுக் கல்வி – 01 - தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AC – ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 333 – தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்
(த.தொ.கு. 2202-01-101-AC-333-04)

<u>பள்ளிக் கல்வி – ரூ.68,52,12,000/-</u>

2202 – பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AA – அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 333 – தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்
(த.தொ.கு. 2202-02-109-AA-333-04)

9. மேலே பத்தி 7(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.109,91,52,000/-, 2022-2023-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி மேலே பத்தி-7(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினம் 2022-2023-ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2022-2023) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி-II/ வ.செ.பொது-I)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை – 6 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

Scanned with Oken Scanner

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.10/ADS(GKT)/நிதி (கல்வி-II)த்துறை/2023, நாள்07.01.2023ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 2236 (இரண்டாயிரத்து இருநூற்று முப்பத்து ஆறு) (IFHRMS ASL No.2023012236)

//ஆளுநரின் ஆணைப்படி//

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
ஆணையர், கருவூலம் மற்றும்
கணக்கு துறை, சென்னை -15.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முகஉதவியாளர், சென்னை-9..
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை முதன்மைச் செயலாளர்,
சென்னை-9.
நிதி(கல்வி-II / வ,செ,பொது-I/II/வ.வ-I)த் துறை,
சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/1/23
அரசு சார்புச் செயலாளர்

Scanned with Oken Scanner